## சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

## வாக்குமூல படிவம்
## OS.No.52/2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்ரமணியன் | வா.சா | : | 1 |
| க/பெயர் | : | பழனிசாமிகவுண்டர் | தொழில் | : | லாரி தொழில் |
| ஊர் | : | திருச்செங்கோடு | தாலுக்கா | : | திருச்செங்கோடு |
| வயது | : | 64 | நாள் | : | 12.07.2023 |

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.
குறுக்கு விசாரணை

நான் லாரி தொழில் செய்கிறேன். எனக்கு சொந்தமாக லாரி உள்ளது அதை வாடகைக்கு விடுகிறேன். நான் 1967 லிலிருந்து லாரி தொழில் செய்துவருகிறேன். நான் 1995 லிருந்து 2005 வரை ரிக் வண்டி வைத்து தொழில் செய்துவருகிறேன். நான் மேற்சொன்ன தொழிலிருந்து வரும் வருமானங்களை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன். வருமான வரிக்கணக்கில் லாபம், நட்டம், நான் கொடுத்த கடன், வாங்கிய கடன் போன்ற விவரங்கள் இருக்குமென்றால் சரிதான். அந்த விவரங்களை நான் வருமான வரி கணக்கில் காண்பிக்கவேண்டுமென்றாலும் சரிதான். மேற்படி முத்துசாமிக்கு கொடுத்த கடனை எனது வருமான வரி கணக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நான் லட்சுமி விலாஸ் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். கொடுக்கல் வாங்கல் விவரங்கள் லட்சுமி விலாஸ் வங்கி ஸ்டேட்மெண்டில் பார்த்தால் தெரியும் என்றால் சரிதான், ஆனால் அந்த வங்கி கணக்கை நான் முடித்துக்கொண்டேன். நான் மேற்சொன்ன வங்கி கணக்கை 2018 ல் முடித்துக்கொண்டேன். முத்துசாமிக்கு கடன் கொடுத்த சமயத்தில் என்னிடம் ரூ.4,00,000/- இருந்தது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் கைவசம் பணம் இருந்தது. மேற்படி கைவசம் இருந்ததால் அந்த விவரம் வங்கி கணக்கில் வராது என்றால் சரிதான். எனக்கு ஒரு மகன், ஒரு மகள் என்றால் சரிதான். எனது மகன் பெயர் கௌதம், எனது மகள் பெயர் கிருத்திகா என்றால் சரிதான்.

3. சிஎச்பி காலனியில் உள்ள பைனான்ஸ் தொழில் செய்யும் சண்முகம் மகன் முருகனை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ரிக் தொழில் செய்துவரும் பல்லங்காட்டை சேர்ந்த பெருமாள் மகன் சக்திவேலை தெரியுமா என்றால் எனக்கு

தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோவில் என்னுடன் இருப்பவர் ராமசாமி. மேற்படி புகைப்படம் இன்று நீதிமன்றத்திற்கு வெளியே எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகைப்படம் பி.சா.ஆ.1 ஆகும் எண்ணிக்கை 2. (மேற்படி புகைப்படம் சம்மந்தமாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணையானது நீதிமன்ற வளாகத்திற்குள் நீதிமன்ற அனுமதி இல்லாமல் எடுக்கப்பட்ட புகைப்படம் என்று தெரிவிக்கப்பட்டது. மேற்சொன்ன ஆட்சேபணை வழக்கின் இறுதியில் தெரிவிக்கப்படும். மேற்படி சாட்சியானவர் புகைப்படம் பற்றி நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வந்திருந்ததாகவும், வெளி வளாகத்தில் அமர்ந்திருந்தபோது ராமசாமி என்பவர் எதேச்சையாக வந்து பேசியதாகவும், அப்பொழுது என்னுடைய அனுமதி இல்லாமல் இந்த புகைப்படம் எடுக்கப்பட்டதாகவும் அந்த புகைப்படத்தை முத்துசாமியின் மூத்த மகள் எடுத்ததாக தெரிவிக்கிறார்.) ராமசாமி எல்ஐசி முகவராக உள்ளார் என்றால் சரிதான். அவருடைய முதல் மருமகன் பெயர் ரவிச்சந்திரன் என்றால் சரிதான். 2 வது மருமகன் பெயர் அர்த்தநாரீஸ்வரன் என்றால் சரிதான். முத்துசாமி, அர்த்தநாரீஸ்வரன், சண்முகம், கல்யாணி ஆகியோர் ஆர்சிஎம் ரிக் சர்வீஸ் மற்றும் போர்வெல் ஆகிய கூட்டாண்மை தொழிலை நடத்திவந்தனர் என்றால் முத்துசாமி மேற்சொன்ன நிறுவனத்தில் பங்குதாரர் என்பது தெரியும், ஆனால் யார் தொழில் நடத்திவந்தார் என்று தெரியாது.

4. எல்ஐசி முகவர் ராமசாமி எனக்கு நண்பரா என்றால் இல்லை, ஆனால் எல்ஐசி போடச்சொல்லி அவ்வப்பொழுது என்னிடம் கேட்பார். முத்துசாமி இறந்தபிறகு பிரதிவாதிகளுக்கும், மேற்சொன்ன கூட்டாளிகளுக்கும் இடையே பிரச்சனை உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரச்சனை எதுவும் இல்லை நன்றாகத்தான் இருந்தனர். எனது முதல் சம்மந்தியின் பெயர் வி.எம்.பழனிசாமி என்றால் இல்லை. 2 வது சம்மந்தியின் பெயர் தான் வி.எம்.பழனிசாமி. அவர் எனது மனைவியின் சகோதரர் ஆவார். முத்துசாமி எப்போது இறந்தார் என்றால் 20.02.2017 ஆகும். பொதுவாக இறந்தவரின் 16ம் நாள் முடியும் வரை அவரின் வீட்டிற்கு துக்கம் விசாரிக்க செல்வார்கள் என்றால் சரிதான். நான் முத்துசாமியின் வீட்டிற்கு துக்கம் விசாரிக்க சென்றேனா என்றால் இல்லை. ஆனால் முத்துசாமியின் வாரிசுகளிடம் முத்துசாமி இறந்த பிறகு எனது கடனை கேட்க சென்றேன் எப்பொழுது சென்றேன் என்றால்

23.02.2017 நான் 3 வது நாளிலேயே முத்துசாமி வாரிசுகளிடம் பணம் கேட்டேன் என்றால் சரிதான். அந்த ஒரு முறை தான் கேட்டேனா என்றால் இல்லை, பலமுறை கேட்டேன். நான் பிரதிவாதிகளுக்கு எப்பொழுது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 25.02.2017 ல் அனுப்பினேன். நான் சிஎச்பி காலனியில் உள்ள சி.பரணீதரன் என்ற வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

5. மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதிலறிவிப்பு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த அறிவிப்பு தான் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பில் உள்ள விவரங்கள் ஆங்கிலத்தில் உள்ளது ஆனால் நான் கேட்டு தெரிந்துகொண்டேன். அந்த பதிலறிவிப்பில் பதிலறிவிப்பு கிடைத்த 3 நாட்களுக்குள் தாவா கடனுறுதி சீட்டின் நகலை பிரதிவாதிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வகையில் நான் மேற்படி கடனுறுதி சீட்டின் நகலை பிரதிவாதிகளுக்கு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் முத்துசாமி இறந்தபிறகு பிரதிவாதிகளிடம் பணம் கேட்க சென்ற 23.02.2017 அன்றே அசல் தாவா புரோநோட்டை எடுத்துச்சென்று பிரதிவாதிகளிடம் காண்பித்தேன், அவர்கள் அதனை பார்த்துவிட்டு பணம் ஏற்பாடு செய்து தருவதாக சொன்னார்கள், மேலும் முத்துசாமி அவரது டைரியில் குறித்து வைத்திருப்பதாகவும் முத்துசாமியின் இளைய மகள் சொன்னார்.

6. மேற்சொன்ன விவரங்களை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், வழக்கிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் மேற்சொன்ன விவரங்கள் நடைபெறவே இல்லையென்றாலும் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா புரோநோட்டில் எனக்கு சம்மந்தியும், மச்சினனும் ஆகிய வி.எம்.பழனிசாமி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தரப்பில் வி.எம்.பழனிசாமியை விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிக்க உள்ளேன்.

**பிரதிவாதிகள் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- D.Mohankumar

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.<br>Sd/.D.Mohankumar,<br>Subordinate Judge,<br>Tiruchengode. |